**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | CC. No.88/2023 | அரசுதரப்பு சாட்சி P.W.3 |
| பெயர் | முத்தையா | கிராமம் |
| தந்தை பெயர் | முத்தையா | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 15.07.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா பூவரசக்குடி அழகாம்பாள்புரத்தில் வசித்து வருகிறேன். நான் மருந்து விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். 30.10.2022ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் எனக்கு போன் மூலம்தகவல் தெரிவித்தார்கள். காயத்திரி என்ற 13வயதுடைய பெண்குழந்தை அறந்தாங்கி- புதுக்கோட்டை சாலையில் லாரியில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். சத்திரப்பட்டி என்ற இடத்தில் சம்பவம் நடந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது 30.10.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த மணிமுத்து, பொற்பனையான்,

முருகேசன், சின்னையா ஆகியோருடன் சக்தி கோட்ச் ஓர்க்ஷாப் முன்பு பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது பூவரசக்குடி அரசு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வரும் பாலு என்பவரின் மகள் காயத்திரி அறந்தாங்கி–புதுக்கோட்டை ரோட்டில் வடக்கு பக்கம் உள்ள அவர்களுடைய தோட்டத்தில் இருந்து தெற்கு பக்கம் உள்ள அவர்களுடைய வீட்டிற்கு செல்வதற்காக சாலையை கடக்க முற்பட்டபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி புதுக்கோட்டையில்இருந்து வந்த அசோக் லேலாண்ட் லாரி பதிவு எண் TN 55 BS 8121 வண்டியை இந்த வழக்கின் எதிரி Horn அடிக்காமல் அதிவேகமாக ஓட்டிவந்து காயத்திரி மீது மோதியதில் சம்பவஇடத்திலேயே காயத்திரி இறந்துவிட்டார் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நஷ்டஈடு பெற்றுவிட்டதால் எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/–முத்தையா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**